மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

10—

தேன் பதப்படுத்தும் தொழிற்சாலை

***3139—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தேன் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் தேன் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், சித்தா மருத்துவமாக இருக்கட்டும், ஆயுர்வேத மருத்துவமாக இருக்கட்டும் அல்லது அலோபதி மருத்துவமாக இருக்கட்டும், இவற்றுக்கெல்லாம் பயன்படுத்தக்கூடிய அளவில், இன்றைக்கு சின்னக் குழந்தைகளுக்கு மருந்து கொடுக்க வேண்டும் என்று சொன்னால்கூட, அதற்குத் தேவைப்படும் தேனை முழுமையாக உற்பத்தி செய்கின்ற இடம் கன்னியாகுமரி*

2022 ஜனவரி 6]

மாவட்டத்தில் இருக்கின்ற மார்த்தாண்டம் பகுதி. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தேனீ பெட்டிகளோடு, கிட்டத்தட்ட 50,000 தேன் உற்பத்தியாளர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். season *நேரத்தில் தேனை உற்பத்தி செய்து பதப்படுத்துகிறார்கள். ஆனால், பதப்படுத்துவது, குடிசைத் தொழிலாக, சிறிய குடிசைத் தொழிலாக உள்ளது. இன்றைக்கு இந்தியாவில் உள்ள, கேரளா, குஜராத் போன்ற பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் தேன் உற்பத்தி செய்யப்படுவது மட்டுமல்லாமல், தேனையும், மிளகு போன்றவற்றையும் உற்பத்தி செய்யக்கூடிய திறமை வாய்ந்தவர்கள் எங்கள் மாவட்டத்தில் வசிக்கக்கூடிய மக்கள். உற்பத்தி செய்கின்ற தேனை பதனிடும் தொழிற்சாலைகள் எங்கள் மாவட்டத்தில் இல்லாத காரணத்தினால், உற்பத்தி செய்கின்ற தேனை பதனிட முடியாமல் அவை கெட்டுப்போகின்றன. அதனால், தேனை நல்ல விலைக்கு விற்க முடியாமல், குறைந்த விலைக்கு விற்கக்கூடிய நிலை இருக்கிறது.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைத்தான் கேட்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இதற்கென எந்தத் தொழிற்சாலையும் கிடையாது. ஆகவே, எல்லோரும் பயன்படுத்தக்கூடிய தேனை உற்பத்தி செய்தபின், அதனைப் பதனிடக்கூடிய வகையில், தேன் பதப்படுத்தும் தொழிற்சாலையை கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, இந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கதர்*

கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் இரண்டு தேன் பதப்படுத்தும் தொழிற்கூடங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில், கடந்த ஆண்டில், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில், விளவங்கோடு வட்டம், அம்சி என்ற இடத்தில் செயல்பட்டுவரும் தொழிற்கூடத்தில், உற்பத்தியாளர்களிடமிருந்து 24,535 கிலோ பதப்படுத்தப்படாத தேன், ரூ.34,35,000/–க்கு கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்பட்டது. இந்த நிதியாண்டில், 40,215 கிலோ பதப்படுத்தப்படாத தேன் ரூ.56,30,000/–க்கு கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தி, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், குழித்துறை நகராட்சி, வெட்டுவெந்நி என்ற இடத்தில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேன் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், தனியார் தொழில் முனைவோர் தேன் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க முன்வந்தால், இந்த அரசு முன்வந்து, அதை அமைக்க உதவிடுமா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்க சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம்–NEEDS, வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்–UYEGP மற்றும் ஒன்றிய அரசின் பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்–PMEGP ஆகிய திட்டங்களின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்த அரசு பதவியேற்ற ஏழு மாத காலத்தில், 59 பயனாளிகளுக்கு ரூ.93 இலட்சத்து 28 ஆயிரம் மானியத்துடன் ரூ.3 கோடியே 73

2022 ஜனவரி 6]

இலட்சம் மதிப்பிலான (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் திட்டங்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்களின்கீழ், தேன் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க தொழில் முனைவோர் எவரேனும் முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய வங்கிக் கடனுக்கு பரிந்துரை செய்து, தொழில் தொடங்க உதவி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

5. விதி 110—ன்கீழ் அறிக்கை

நீட் நுழைவுத் தேர்வுக்கு எதிராக அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், ஒருமித்த நிலைப்பாட்டினை எட்டவும் சட்டமன்ற அனைத்துக் கட்சிகள் கூட்டம் 8-1-2022 அன்று கூட்டப்படுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு விதி 110—ன்கீழ் ஓர் அறிக்கையினைச் சமர்ப்பிக்க நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘எல்லார்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கி நகரட்டும் இந்த வையம்’ என்ற உன்னதமான குறிக்கோளைக் கொண்டதுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, கல்வி என்பதை அடிப்படை உரிமையாகச் செயல்படுத்திக் காட்ட நினைக்கக்கூடிய அரசாகவும் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. எந்தவொரு கல்லூரிச் சேர்க்கையாக இருந்தாலும், அதற்கு வைக்கப்படும் நுழைவுத் தேர்வானது ஏழை எளிய, கிராமப்புற விளிம்பு நிலை மாணவ